**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ஆம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண் –142/2023**

**CNR No:TNAL050001842023**

தமிழரசி (எ) முத்தமிழ்ச்செல்வி – வாதி

/எதிர்/

1. கந்தன்,
2. சதீஸ்,
3. வட்டாட்சியர் அவர்கள், ஆண்டிமடம்,
4. வருவாய் வட்டாட்சியர் அவர்கள், உடையார்பாளையம்,
5. மாவட்ட ஆட்சியர் அவர்கள், அரியலூர். – பிரதிவாதிகள்

தாவா சொத்தில் வாதிக்குரிய உரிமையிலும், அனுபவத்திலும் 1, 2 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, எவ்வித இடையூறும் செய்யாமல் இருக்க நிரந்தர தடையுறுத்துக்கட்டளை வழங்கியும், தாவா சொத்திற்கு வாதியின் பெயருக்கு 3, 4, 5 பிரதிவாதிகள் பட்டா வழங்க 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு செயலுறுத்துக்கட்டளை வழங்கியும், தாவா செலவு தொகை பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்கு கிடைக்கவும், மற்றும் சமூகம் நீதிமன்றத்திற்கு தம்யுக்தமாய் தோன்றும் இதர யாவொத்த பரிகாரம் வாதிக்கு வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் செய்ய வாதி சமூகம் நீதிமன்றத்தில் வேண்டி பிரார்த்திக்கின்றார்.

இவ்வழக்கானது 12.06.2024 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.இள.சிவராமன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.தமிழ் காந்தி அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 5 வரையுள்ள பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

வாதி ஆஜர். 2வது பிரதிவாதி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 17 விதி 1 ன்படி வாதியின் தரப்பு வழக்கறிஞர் மூலம் மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், தள்ளுபடி செய்யப்பட்டது. கடந்த வாய்தாவில் வாதி தரப்பில் ஒத்திவைப்பு மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இன்று இவ்வழக்கு சிறப்பு பட்டியல் விசாரணைக்காக

பட்டியலிடப்பட்டிருந்தது. இந்நிலையில் வாதியின் வருகை மிகவும் அவசியமாகிறது. வாதி தனது தரப்பு விசாரணையை தொடங்க முன்வரவில்லை. எனவே இந்நீதிமன்றம் வாதி தனது தரப்பு விசாரணையை தொடர்ந்து நடத்த விரும்பவில்லை எனக் கருதுகிறது. எனவே, நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

<u>வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

–இல்லை–

<u>பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

–இல்லை–

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.